Tamil | தமிழ்

# FOGO செய்வது எப்படி

## FOGO சேகரிப்புச் சேவை என்றால் என்ன?

உணவுக் கரிமங்கள் (Food Organics) மற்றும் தோட்டக் கரிமங்கள் (Garden Organics) (FOGO) சேவை என்பது உணவுக் குப்பைகள் மற்றும் தோட்டக் கரிமங்களுக்கான வாராந்திர சேகரிப்பாகும்.

வீட்டுக் கழிவுகள் குப்பைக் கிடங்குக்குச் (landfill) செல்வதைக் குறைக்க FOGO உதவுகிறது. உங்கள் FOGO தொட்டியில் உள்ள பொருட்கள் இங்கே கான்பெராவில் உரமாக மாற்றப்படுகின்றன.

உங்கள் அனைத்து உணவுக் குப்பைகளுடன் சேர்த்து, தோட்டக் கழிவுகளுக்கு எலுமிச்சை பச்சை நிற மூடி கொண்ட FOGO தொட்டியைப் பயன்படுத்தலாம்.

பெல்கோனென்' நகர மையம் (Belconnen Town Centre), 'புரூஸ்' (Bruce), 'குக்' (Cook), 'மெக்வையரி' (Macquarie) மற்றும் 'டக்கெரனோங்'கில் (Tuggeranong) உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள 6,500 க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு **FOGO** வழங்கப்படுகிறது.

# FOGO

# உணவுக் கரிமங்கள் (Food Organics) மற்றும் தோட்டக் கரிமங்கள் (Garden Organics)

↑ *அன்றாடக்* **காலநிலைத் தேர்வுகள்**

## FOGO செய்வது எப்படி

உணவு தயாரிக்கும் போதும், மீதமுள்ளவற்றை சுத்தம் செய்யும் போதும் உணவுக் குப்பைகளைச் சேகரிக்க ஒரு கொள்கலன் அல்லது FOGO கழிவுப்பெட்டியைப் பயன்படுத்தவும். FOGO கழிவுப்பெட்டிக்கு உள் உறைகள் (liners) கட்டாயமில்லை, ஆனால் ஆஸ்திரேலியத் தரநிலை AS 5810 -க்கு இணங்க **இருக்க வேண்டும்**. தேவைக்கேற்ப உங்கள் FOGO தொட்டியில் உள்ள பொருட்களை வெளியேற்றவும்.

1. உங்கள் அனைத்து உணவுக் குப்பைகளையும் ஒரு கழிவுப்பெட்டியில் சேகரிக்கவும். சான்றளிக்கப்பட்ட மக்கக்கூடிய உள் உறையை நீங்கள் கழிவுப்பெட்டியில் பொருத்தலாம் அல்லது உணவுப் பொருட்களை நேரடியாக உள்ளே கொட்டலாம்.

2. பெட்டி நிரம்பியவுடன், அவற்றை உங்கள் தோட்டக் கழிவுகளுடன் உங்கள் FOGO தொட்டியில் போடவும்.




**இந்தத் தகவலைப் படிப்பதற்கோ அல்லது புரிந்துகொள்ளவோ உங்களுக்கு உதவி தேவைப்படுகிறதா?**

இந்தத் தகவலை வேறு வடிவத்தில் கேட்பதற்கு அல்லது பெறுவதற்கு,

13 22 81 என்ற எண்ணில் Access Canberra -ஐ அழைக்கவும்

Interpreter

உங்களுக்கு மொழிபெயர்த்தல் மற்றும் மொழிபெயர்த்துரைத்தல் சேவை தேவைப்பட்டால், 13 14 50 என்ற எண்ணை அழைக்கவும்

FOGO புதுப்பித்தல்களுக்குப் பதிவு செய்யவும்.

**பதிவு செய்வதற்கு அலகீடு (scan) செய்யவும்.**

## உங்கள் உணவுக் குப்பைகள் வகைப்படுத்தப்படுகின்றன




## மேலும் அறிந்து கொள்க

- www.act.gov.au/fogo
- fogo@act.gov.au
- Access Canberra 13 22 81



ACT Government

கழிவுகள் வகைப்படுத்தப்படுகின்றன

**www.act.gov.au/fogo**

09 2025

# உங்கள் FOGO தொட்டிக்குள் போட வேண்டியவை எவை?

உங்கள் FOGO தொட்டியில் சில பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இந்தப் பொருட்கள் உங்கள் FOGO தொட்டியில் போடப்படும்போது, அது தூய்மைக்கேடு என்று அழைக்கப்படுகிறது. தூய்மைக்கேட்டைத் தடுப்பதன் மூலம், உயர்தர உரம் தயாரிக்கப்படுவதை நாங்கள் உறுதிசெய்ய முடியும்.




## எனது குப்பைத் தொட்டிகள் எப்போது சேகரிக்கப்படும்?

வாரம் ஒருமுறை

இரு வாரங்களுக்கு ஒருமுறை

இரு வாரங்களுக்கு ஒருமுறை




உங்கள் குப்பைத் தொட்டி சேகரிப்பு நாட்காட்டிக்குப் பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்:

**www.cityservices.act.gov.au/recycling-and-waste/bins**

## ஆம் - இந்தப் பொருட்களை உங்கள் FOGO தொட்டியில் போடலாம்.

**பின்வருவன உட்பட அனைத்து உணவுக் குப்பைகளும்:**

- மீந்த உணவு வகைகள் மற்றும் சமைத்த உணவு
- பால்வளப் பொருட்கள் மற்றும் முட்டைகள்
- பழம் மற்றும் காய்கறித் துண்டுகள் (ஸ்டிக்கர்கள் அகற்றப்பட்டவை)
- இறைச்சி, கடல் உணவு மற்றும் எலும்புகள் (சிப்பி ஓடுகள் கிடையாது)
- ரொட்டி, தானியங்கள் மற்றும் தானிய வகைகள்
- காபித் தூள்கள் மற்றும் தேயிலை இலைகள்

**தோட்டக் கரிமங்கள் (Garden Organics):**

- புல் நறுக்குகள் மற்றும் களைகள்
- கத்தரிப்புகள் மற்றும் சிறிய கிளைகள்
- பூக்கள் மற்றும் இலைகள்

**வீட்டுக்கான மக்கக்கூடிய உள் உறைகள் AS 5810:**

வழங்கப்பட்ட உள் உறைகள் பிளாஸ்டிக் அல்லாதவை மற்றும் அவை வீட்டுக்கான மக்கக்கூடிய பொருளின் ஆஸ்திரேலியத் தரநிலை AS 5810 -ஐப் பூர்த்தி செய்கின்றன

வீட்டுக்கான மக்கக்கூடியவை AS 5810

## இல்லை — இந்தப் பொருட்களை உங்கள் FOGO தொட்டியில் போட முடியாது.

- பிளாஸ்டிக் பைகள்
- மக்கக்கூடிய பொருட்கள் (சான்றளிக்கப்பட்ட கழிவுப்பெட்டி உள் உறைகள் தவிர)
- தேநீர்ப் பைகள்
- விலங்கு எச்சங்கள்
- பூனைக் கழிவு மற்றும் விலங்குக்கான படுக்கை விரிப்பு
- முடி
- காகிதம், திசுக்கள் மற்றும் காகிதத் துண்டு
- மக்கும் பொருட்கள் அல்லது பைகள்
- சிப்பி ஓடுகள்
- துப்புரவுப் பொருட்கள் அல்லது நாப்கின்கள்
- பெருக்கப்பட்ட தூசி
- சுத்திகரிக்கப்பட்ட மற்றும் வர்ணம் பூசப்பட்ட மரம்
- கட்டிடப் பொருட்கள்
- உலோகம்
- கண்ணாடி
- ஜவுளி மற்றும் ஆடைகள்

சந்தேகமாக இருக்கிறதா? விட்டுத் தள்ளுங்கள்.

மறுசுழற்சி மற்றும் கழிவுகளுக்கான A-Z வழிகாட்டியைத் தேடுங்கள்.

**www.act.gov.au/wastesorted**

FOGO முன்னோடித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும், பகிரப்பட்ட கழிவு வசதிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் (apartments) அல்லது நிரைமனைகள் (townhouses) வேறுபட்ட சேகரிப்புக் காலச்சுழற்சியைக் கொண்டிருக்கலாம்.

உங்கள் கட்டிடத்தில் கழிவு மேலாண்மை குறித்த தகவலுக்கு உங்கள் கட்டிட மேலாண்மைக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

## ஒரு தொழில்முறை வல்லுநரைப் போல FOGO செய்வதற்கான உதவிக்குறிப்புகள்

- ✓ உங்கள் கழிவுப்பெட்டியை மூடி வைக்கவும்.
- ✓ உங்கள் கழிவுப்பெட்டியைத் தவறாமல் கழுவவும் (இது பாத்திரங்கழுவியில் பாதுகாப்பாகப் பயன்படுத்தக்கூடியது-dishwasher safe).
- ✓ உங்கள் FOGO தொட்டி நிறையவில்லை என்றாலும், ஒவ்வொரு வாரமும் அதை வெளியே எடுத்து வைக்கவும்.
- ✓ இறைச்சி மற்றும் கடல் உணவு எலும்புகள் போன்ற குப்பைகளைச் சேகரிப்பதற்குச் சற்று முன்பு வரை குளிர்சாதன உறைவிப்பானில் (freezer) வைக்கலாம், அது துர்நாற்றம் இல்லாமல் இருக்க உதவும்.
- ✓ முடிந்தவரை, உங்கள் FOGO தொட்டியை நிழலில் வைக்கவும்.